THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

Calender : **CC.No.120/2019** **PW.7**
Miscellaneous :
Preliminary Register :

STATEMENT OF WITNESS
Name : பொன்தாஸ்
Father's Name : அன்பையா
Village :மகிழ்ச்சிபுரம்
Taluk :இராதாபுரம்
Employment : கொத்தனார்
Age :42 Date:30.06.2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**( All Accused absent and petition U/s.317 Cr.P.C is filed and allowed)**

**முதல் விசாரணை :—**

1. நான் மகிழ்ச்சிபுரத்தில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.4 ஆகும்.** அந்த கையெழுத்தை 2016ம் வருடம், தேதி, மாதம் நினைவில்லை. கள்ளிகுளம் பேருந்து நிறுத்தத்தில் ஒரு நாள் காலை 11.00 மணியளவில் நின்று கொண்டிருந்த போது போலீசார் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த கையெழுத்தையும் கள்ளிகுளம் பேருந்து நிறுத்தத்தில் வைத்து செய்து கொடுத்தேன். இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. **(நீதிமன்ற கேள்வி—**

**யாராவது உங்களை மிரட்டினார்களா என்றால் என்னை யாரும் மிரட்டவில்லை. நானாகவே சாட்சியம் அளிக்கிறேன்.)**

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

2. போலீசார் விசாரணையில் கடந்த 13.12.2016 தேதி 11.00 மணிக்கு வழக்கின் 1 வது எதிரி வள்ளியூர் கோட்டையடி விலக்கில் வைத்து போலீசார் விசாரித்த போது தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும் அதில் நானும், மோகன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும். எழுதி கொடுத்த தகவலின் அடிப்படையில் வழக்கின் சொத்தான ரூ.600/– ஐ எதிரியின் வீட்டில் வைத்து அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார் என்றும், அதில் நாங்கள் இருவரும் சாட்சியாக கையொப்பம் செய்ததாக கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு வேண்டி உண்மையை மறைத்து அரசுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

3. இல்லை.

Taken down me in open court in the presence of the accused read over to the deponent and admitted by him/her to be correct.

MOSES JEBASINGH Digitally signed by MOSES JEBASINGH Date: 2025.06.30 19:14:41 +0530

Judicial Magistrate,
Valliyoor.